முருகப்பெருமான் துணை

**மகான் நரசிங்கமுனைய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.03.2023, வியாழக்கிழமை

1. அறமே வடிவாக வந்த ஞானியே
   அரங்கனே உன்பெருமை கூறி
   வரமென அனுகூல ஆசிதனை
   வழங்குவேன் சுபகிருது சேல் திங்கள்
2. திங்களிலே உபய திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 02 ம் நாள், 16.03.2023, வியாழக்கிழமை)
   தேசிகனுக்கு நரசிங்கமுனைய நாயனாரும்
   இங்கனமே உலகநலமுற உரைப்பேன்
   இயம்பிடுவேன் தருமஞான பலம் கொண்ட
3. கொண்டநல் குருமார்க்கம் தன்னை
   குறைவிலா மக்கள் ஏற்று
   தொண்டு செய்து உலகோர் வர
   தொடர்ந்து அன்னதானம் செய்துவர
4. வருகவே தருமபலம் பெருகி
   வளர்ந்து வசதிநிலையாக மாறி
   தருமம் செய்து தருமம் காப்பதுடன்
   தரணியை காக்கும் சக்தியாக மாறி
5. மாறியே அரங்கமகான் ஆசிபட
   மகாமந்திர தீட்சை ஏற்றுவர
   தேறியே ஞானிகள் ஆவர்
   தெய்வபலம் பெற்று இனிதே
6. இனிதே உலகை மாற்றும்படி
   எல்லா சக்திகளும் துணையாகி
   கனிவேலவன் வழிபாடு செய்துவர
   காப்புக்கூடி மாற்றம் நிகழும்
7. நிகழவே அற்புதம் படைக்கின்ற
   நிலவுலக பிரணவக் குடிலை
   வகைபட வணங்கித் தொடர்ந்து
   வாரிவழங்கி தருமத்தில் உதவி
8. உதவியே அரங்கன் தருமம்
   உலகினில் தடைபடா வண்ணம்
   ஆதரவு தந்து காத்துவர
   அரங்கனால் அனைத்தும் நடக்குமென
9. நடக்குமென நம்பிக்கை வைத்து
   ஞானிகள் மேல் பூசைசெய்து
   இடர்வெல்லும் சரவணசோதி
   ஏற்றியே முக்காலம் வழிபாடு

10. வழிபாடு முழுமைபட செய்து
வள்ளலே எனத்தொடர்ந்திட
அழியாமை எனும் உயர்கதி
ஆற்றலும் மிகுதி கண்டுஇனிதே

11. இனிதே உலகோர் சிறப்பர்
எல்லா திக்கிலும் ஞானவான்கள்
கனிவேலவன் கருணையால் பெருகி
கலியுகமே ஞானயுகமாகும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—